
**SENGUNTHAR**

# Daily News

12-01-2026/SEC/DN/335




பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

## திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் பொங்கல் விழா கொண்டாட்டம்

திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் சார்பில் செங்குந்தர் பொறியியல் கல்லூரி, செங்குந்தர் மருந்தியல் கல்லூரி, செங்குந்தர் செவிலியர் கல்லூரி மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிகளில் பொங்கல் திருவிழா தமிழர் பாரம்பரிய பண்பாட்டு கலைவிழாவாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டில் நான்கு நாட்கள் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, விவசாயிகளின் அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப்படுவதுடன், சூரியனின் வடக்கு நோக்கிய உத்தராயணப் பயணத்தையும், தை மாதத்தின் மங்களகரமான தொடக்கத்தையும் குறிக்கும் திருநாளாக விளங்குகிறது. விவசாயம் மற்றும் இயற்கையின் சுழற்சியை கொண்டாடும் இவ்விழாவில், இனிப்பு பொங்கல் சமைத்தலும், கால்நடைகளை கௌரவிக்கும் மரபுகளும் பின்பற்றப்பட்டது.

இவ்விழாவை செங்குந்தர் கல்வி குழுமத்தின் தலைவர் திரு. ஜான்சன் T.S. நடராஜன் அவர்கள் தொடங்கி வைத்து, அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்வில் செயலாளர் மற்றும் தாளாளர் திரு. A. பாலதண்டபாணி அவர்கள், பொருளாளர் திரு. M.K. தனசேகரன் அவர்கள், செயல் இயக்குனர் திரு. அரவிந்த் திருநாவுக்கரசு அவர்கள், செங்குந்தர் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் R. சதீஷ்குமார் அவர்கள், செங்குந்தர் மருந்தியல் கல்லூரி முதல்வர் திரு. சுரேந்தர்குமார் அவர்கள், செங்குந்தர் செவிலியர் கல்லூரி முதல்வர் திருமதி நீலாவதி அவர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவையொட்டி ஒவ்வொரு துறையின் சார்பிலும் 11 பொங்கல் வைத்து வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ரங்கோலி (கோலப்போட்டி), கும்மி அடித்தல், கோலாட்டம், சிலம்பாட்டம், உரி அடித்தல் போன்ற தமிழரின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு செங்குந்தர் கல்வி குழுமத்தின் தலைவர் திருT.S. ஜான்சன் நடராஜன் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியின் இறுதியாக, செங்குந்தர் மாணவர்களின் பைன் ஆர்ட்ஸ் கிளப் இசைக் குழுவின் சார்பில் தமிழர் பாரம்பரிய இசை விழா நடைபெற்றது இது விழாவிற்கு மேலும் சிறப்பை சேர்த்தது.

## பொங்கல் வைத்து வழிபாடு






# பாரம்பரிய கலை விழா






## தமிழரின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்










சிலம்பாட்டம்






சிலம்பாட்டம்



வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு
பரிசுகளை வழங்கி பாராட்டினார்.







பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள் 698:

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

எமக்கு இளையவர்தான்; இன்ன முறையில் உறவுடையவர் தான் என்று ஆட்சிப் பொறுப்பில் இருப்போரை இகழ்ந்துரைக்காமல், அவர்கள் அடைந்துள்ள பெருமைக்கேற்பப் பண்புடன் நடந்து கொள்ள வேண்டும்..

## இலக்கணக் குறிப்பறிதல்

**இ) இலக்கணச் சூழல்**

ஆடு – ஆடு

ஆடு என்னும் சொல், பெயர்ச்சொல்லாகவும் வரும். வினைச்சொல்லாகவும் வரும். வயலில் ஆடு மேய்கிறது எனச் சொல்லும்போது, ஆடு என்பது, ஒரு விலங்கின் பெயரைக் குறிக்கும் பெயர்ச்சொல். இசைக்கேற்ப நடனம் ஆடு எனச் சொல்லும்போது, ஆடு என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிக்கும் வினைச்சொல்.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: அபூர்வம் தமிழ்மொழி : அருமை